**MCOP NO:1108/2022 DATE:14.12.2023**

ம.சா.1

பெயர்.Srirangam

க/பெ.திரு.வெங்கடேசன்

வயது. 58

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 9 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன். மசாஆ 7 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யபடுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. தொழில், வருமானம், வருமான இழப்பு குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கேட் திறப்பதற்காக வந்தேன், அப்போது ஒரு கேட் திறந்துவிட்டேன் மற்றொரு கேட் திறப்பதற்குள் பின்னால் வந்த கார் மோதிவிட்டது. விபத்து நான் வேலை செய்யும் வீட்டின் கேட்டில் நடந்தது. அது உரிமையாளரின் வீடு ஆகும். நான் வேலை செய்து கொண்டு இருக்கும் போது விபத்து நடந்தது. வேலை சம்பந்தமான விபத்துகளுக்கு இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என் மகன் புகார் கொடுத்தார். அன்றைய தினமே புகார் கொடுத்தோம், ஆனால் எடுக்கவில்லை. 21.10.2021 அன்று தான் வழக்கு பதிவு செய்யபட்டது. புகாரின் நகல் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய அஜாக்கிரதையால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மசாஆ 3ல் நான் விடுவிக்கபட்ட தேதி தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 23.10.2021 அன்று நான் விடுவிக்கபட்டதை தவறாக பிரமாண வாக்குமூலத்தில் கூறி உள்ளேன் என்றால் சரியல்ல. தொடர் சிகிச்சைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு வயிற்றில் அடிபட்டது. விபத்து பதிவேட்டு நகல் தாக்கல் செய்யவில்லை. மசாஆ 7 ஆவணம் வழக்கிற்காக என்னால் தயாரிக்கபட்டது என்றும், அந்த ஆவணம் ஏற்றுகொள்ளகூடியது இல்லை என்றும், சொன்னால் சரியல்ல. 2021ம் ஆண்டு

சிகிச்சை பெற்றேன், மீண்டும் 2023ம் ஆண்டு சிகிச்சை பெற்றேன். நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் ஒட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு உரிய உரிமம் இல்லை என்றால் சரியல்ல. உதவியாளருக்கு சம்பளம் வழங்கியதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.